**I ADDL. DISTRICT MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.2**
**MCOP.NO.412/2017**

| | |
|---|---|
| **NAME** | **:** ரியாஸ் |
| **FATHER NAME** | **:** |
| **VILLAGE** | **:** |
| **TALUK** | **:** |
| **CALLING** | **:** |
| **RELIGION** | **:** |
| **AGE** | **:** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 06.07.2023.**

4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல எனக்கு சம்மன் வரவில்லை. அஸ்லாம் கூறியதன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். அஸ்லாம் யாரென்று எனக்கு தெரியாது. இறந்த நபர் எனக்கு சொந்தம் என்றால் இல்லை. இறந்தவரும், நானும் ஒரே ஊர் என்றால் இல்லை. நான் அந்த பஸ்சில் போனதற்கான டிக்கெட் தாக்கல் செய்யவில்லை. எந்த பஸ்சில் போனேன் என்று நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை. நான் விபத்தை நேரில் பார்க்காமல் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சென்ற பஸ்சிற்கு முன்னால் எத்தனை வாகனம் போனது என்றால் எனக்கு முன்னால் ஒரு வாகனம் சென்றது. இந்த விவரத்தை என் சத்திய பிரமாணத்தில் கூறவில்லை. நாங்கள் சென்ற பஸ்சின் முன்னால் சென்ற டாடா ஏசி லாரியின் பின்னால் மோதி விபத்து நடந்தது. டாடா ஏசி தவிர வேறு எந்த வாகனமும் பின்னால் மோதவில்லை என்றால் சரி. டாடா ஏசிக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த லாரி எவ்வளவு நேரமாக நின்றுகொண்டிருந்தது என்று தெரியாது. நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. நான் அந்த இடத்திலேயே விபத்திற்கு பிறகு அரைமணி நேரம் நின்றுகொண்டிருந்தேன். அதற்குப் பிறகு நான் ஏறிச் சென்ற பஸ்சின் டிக்கெட்டை நான் தாக்கல் செய்யவில்லை. பஸ்சிலிருந்து இறங்கிய நபர்கள் விபத்தை பார்த்தார்கள். பஸ்சிலிருந்து கொஞ்சம்பேர் இறங்கினார்கள். நான் போலீசில் எந்த புகாரும் கொடுக்கவில்லை. நான் போனபோது போலீஸ் யாரும் வரவில்லை. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாரி சாலையின் எந்த பக்கம் நிறுத்தி வைக்கப்பட்டது என்ற விவரம் என் பிரமாண வாக்குமூலத்தில் கூறப்படவில்லை என்றால் சரி. நான் விபத்தை நேரில் பார்த்ததாக இதுவரை காவல்

........2

நிலையத்தில் கூறவில்லை. யார் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. டாடா ஏசின் டிரைவர் பெயர் தெரியாது. விபத்தில் 2 பேர் இறந்தார்கள், பெயர் தெரியாது. நான் இந்த விபத்தையே பார்க்கவில்லை என்றாலும் மனுதாரருக்கு நஷ்டஈடு பெற்றுத்தர வேண்டும் என்ற காரணத்தால் அவருக்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. கண்டெய்னர் லாரியில் லைட் எரியவில்லை, எந்த சிக்னலும் இல்லாமல் நின்றது. இது சம்பந்தமாக நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. விபத்து நடந்தது காலை 6 மணிக்கு. காலையில் 5.30 மணிக்கு விடிந்துவிடும் என்றால் சரி. மனுதாரருக்கு நஷ்டஈடு பெற்றுத்தர வேண்டும் என்பதற்காக லைட் எரியவில்லை என்றும் சிக்னல் இல்லை என்றும் கூறுகிறேன் என்றால் சரியல்ல. அங்கு ஒரு போலீஸ்காரர் போன் நெம்பர் வாங்கினார். அவரிடம் விபத்து பற்றி கூறவில்லை. எந்த போலீஸ்காரர் என்று எனக்கு தெரியாது. காவல் துறையினர் மற்றும் வருவாய் துறையினர் விபத்து நடந்த இடத்தில் விசாரணை நடத்தியதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரி. என் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றாலும் நான் கண்ணுற்ற சாடசியம் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.